ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மஹீஸாரக்ஷேத்ரமென்னுந் திருமழிசையில்

திருவவதாரஞ்செய்தருளிய

## பக்திசாரர் ஊஞ்சல்-லாலி

எச்சரிக்கை மங்களம்.

# ஸ்ரீமத்ராமாயண

# வினாவிடைக் கொம்மி.

இவை

உ-வெ-திருமழிசை கந்தாடை சுத்தசத்வம்.

ஸ்ரீநிவாஸதொட்டாசார்யஸ்வாமியின்

திருவடிஸம்பந்தியும்

பையனூர்-முத்துரங்கப்பிள்ளை பாரியாளுமாகிய

## ஸ்ரீ-பை-அன்னம்மாளால்

இயற்றப்பட்டு,

சென்னைக் கிரிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ

ஈக்காடு - இரத்தினவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

---

பை-கிருஷ்ணசாமிப் பிள்ளையவர்களால்

சென்னை

ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

1911

Registered Copy Right.

இதன்விலை—அணா—2.

ஸ்ரீராமஜெயம்.

## சாற்றுக்கவிகள்.

சென்னைக்கிரிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ஈ. இரத்தினவேலுமுதலியா ரவர்களியற்றிய

அறுசீர்க் கழிநெடில் விருத்தம்.

சீர்பழிஞ்சைப் பத்திசா ரற்கூச லெச்சரிக்கை சிறந்த லாலி
வர்மங்க ளம்மிவற்றோ டிராமகதை கடாவிடையா யிலகு கும்மி
பார்மகிழத் தண்டமிழ்ச்சந்தப்பாவாற்பகர்ந்தனளால்பையனூர்வாழ்
ஆர்மன்னு கற்புடையா ளென்பாற்சோ தரியன்ப ளன்னம் மாளே.

---

சென்னைக்கிரிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ஈக்காடு-இரத்தினவேலுமுதலியா ரவர்கள்

குமாரர் ம-ள-ள-ஸ்ரீ

ஈக்காடு - சபாபதிமுதலியாரவர்களியற்றிய

நேரிசைவெண்பா.

கற்கண்டுந் தேனுங் கலந்ததெனச் செந்தமிழின்
சொற்கொண்டே யன்னம்மாள் சொல்லினள்-விற்கொண்ட
பத்திசா ரற்கூசல் பண்பாரி ராமகும்மி
யெத்திசையு மேத்தெடுக்க வே.



ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத்ராமாயண

# வினாவிடைக்கொம்மி.

## ஆசார்யர் துதி.

எண்சீர்க் கழிநெடில் விருத்தம்.

சீராருந்திருமய்யம் ஜெனித்தசெல்வன்
ஜெகந்நாதனேக்கத்தாற் செழிப்புமோங்கி
வாராருந்திருமகளி னருளினாலே
வளப்பமுடன் மகீக்ஷேரம்வாழுமந்நாளில்
தேரார்ந்தபார்த்தனுக்குப் பகவத்கீதை
தெரிவித்தகிருஷ்ணனைப்போ லடியேனுக்கு
மாராதவிருண்மாற்றி ஞானதீபம்
வாழவைத்தவாரியன்றாள் வணங்குவாமால்.

## பதின்மர் துதி.

பன்னிருசீர்க் கழிநெடில் விருத்தம்.

தாமரைதண்குருகத்தி செவ்வல்லிமலருதித்தார் தாள்கள்போற்றி
தனியரவின்பாய்சுருட்டி வெஃகணைமால்பின்றொடரத்தமிழ்பாக்கூறு
தேமலர்க்காமழிசையர்கோன் மாறனொடுமதுரகவி சீற்றகொல்லி [ம்
செழிக்கவருங்குலசேகரப்பெருமாள் பல்லாண்டு செப்புமுன்னோன்
தாமமொடுபாமாலைசூட்டினாள் தொண்டர் திருத்தாட் டேள்பாணன்
தருகலியனிவர்கடிருவடிபோற்றி பெரும்பூதூர் தழைக்கவாழும்
மாமறைதேரெதிராஜன்வேதாந்த தேசிகன்றாய்வடுகநம்பி
மணவாளமாமுனிவன் முதலாமிவ்வாரியரை வணங்குவாமால்.

## ஆண்டாள் துதி.

இராகம்-மோகனம் தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆண்டாளேயம்மா அருள்கிருப வாரி-பெரிய
ஆழ்வார்குமாரி-ஸ்ரீ ஆண்டாளே.

அநுபல்லவி,

தூண்டாமணிவிளக்கே சுயசுந்தரிவொய்யாரி
காண்டாவனமெரித்த காளைமைத்துனன்பாரி. (ஆண்)

சரணம்.

சீதாசமேதனை ஸ்ரீராமச்சந்திரனையும்
சித்தங்கவரச்செய்யும் ஜெகரூபி
மாதாஉனக்குநிகர் யாதாமொருவருண்டோ துளப
மதிலவதரித்த பிரதாபி
கோதாயுன்பொன்னடி கொண்டேனடியேன்முடி
குறையுண்டோஎர்தனுக்கு அசைரூபி-நின்
பாதாரவிந்தமல்லா லாதாரமேதெனக்குன்
பத்தாவுடனேநீ யதைஸ்தாபி. (ஆண்)

## பெருமாள் ஊஞ்சல்.

1. உலகுதனிலுத்தமமாந் தலமீதென்ன
உம்பர்புகழ்மழிசைநகர் தனையுகந்து
மலரயனும்வாசவனு மகிழ்ந்துவாழ்த்த
மாதுமலர்மங்கைபுவி மடந்தையோடும்
இலகுசுடராழிசங்க மினிதேந்தி
யேழுலகுக்கீசனிவ னென்றுகாட்டித்
திலகமெனவீற்றிருக்குஞ் செல்வனாக
ஸ்ரீஜெகந்நாதப்பெருமாள் ஆடீரூசல்.

## திருமழிசைப்பிரான் ஊஞ்சல்

2. மகப்விளங்கமகிஸார க்ஷேத்திரம்வாழ
மாதவஞ்சேர் பார்க்கவர்க்குமைந்தனாகிப்
புகலரியவறுசமயந் தோறும்போந்து
புந்தியினுலாராய்ந்து பேயனடியடைந்து
ஜெகமதனில்வைணவமே சீரிதென்று
செந்தமிழந்தாதி திருச்சந்தம்பாடி
அகிலருக்குமகவிருளை யகற்றிஞான
வருள்பொழியும்மழிசையர்கோன் ஆடீரூசல்.

திருமழிசைப்பிரான் ஊஞ்சல்.

3. அரணயனுந்தேவரெலா மடியரென்றும்
அச்சுதனேயனைவரினு நெடியனென்றும்
கரைபெருகுங்காவிரி நீரெதிரில்நீந்தாங்
கவிதையினாற்காசினியோ ரெவர்க்குங்காட்டி
வரமளிக்கவந்தமலை மங்கைபாகன்
வலியடக்கிமறையவர்தங் குறும் பைவாட்டித்
திறமுடையவந்தணர்முன் பூசைகொண்ட
சீர்திகழும்மழிசையர்கோன் ஆடிரூசல்.

4. கணிகண்ணன்கச்சிநகர் தன்னைநீங்கக்
கார்மேகவண்ணனிடங் கடுகிச்சென்று
மணிவண்ணாபாய்சுருட்டி வாவென்றோத
மாதவனுஞ்சொல்வண்ணம் வாய்ந்துகாட்டி
அணிகுடந்தைநகர்கிடந்த வாதிதன்னை
யடியிணைகள்நொந்தவகை யருளென்றோதத்
துணிவொடவனெழுந்திருந்து சொல்லவாழ்த்துந்
தொல்புகழ்சேர்மழிசையர்கோன் ஆடிரூசல்.

5. சீர்பூத்தமஹீக்ஷேத்ர செல்வனாக
ஜெகந்நாதன்றிருவருளைச் சிரமேல்கொண்டு
பார்பூத்தபார்க்கவரின் பாலனாகிப்
பண்புடனேயௌவன பருவந்தோன்றிக்
கார்பூத்தமழிசைநக ரதனைநீங்கிக்
காணரியசமயமெலாங் கண்டுதேறி
நீர்பூத்தமுடியரற்கு நிஷிதம்பேசி
நிமலபத்திசாரனெழிலாடி ரூசல்.

6. குன்றெடுத்தன்றுகந்த கோபாலன்சீர்
கூறாதநாளெல்லாங் குறைநாளென்றே
அன்றுயான்பிறந்திலேன் அவனிமீதில்
ஆதலினாலென்தவமும் அவமாமென்றே
இன்றுயானறிந்துகந்தேன் எம்பெருமானென்றே
வழுலகமீரடியாலளந்த கோனை
மன்றதனிலுயர்க்ஷேத்ர னாகத்தோன்று
மாபத்திசாரனெழில் ஆடிரூசல்.

## கொம்மி ஊஞ்சல்.

7. சுதரிசனும்ஸனும் தீரனடி மிரு
துஷ்டநிக்ரகசம்மாரனடி
மகவளர் சீலன் பார்க்கவரின்
மக வெனு மூலன் மகீக்ஷேத்ரம்
வளர்ந்திடு லோலன் மறைகளை
மாரிக்கண யாகத்தமிழ் வாரிச்சொரி வாருத்தம
வானென்றே ஊஞ்சலாட்டுங்கடி கன
வானென்றே ஊஞ்சலாட்டுங்கடி.

8. இடங்கொண்டமழிசைக் கிறைவனடி மற்ற
இதரமதத்தில் துறை வனடி
திடங்கொண்டு ஓடி மதங்களைத்
தேடியே வாடி மால்தம்
சீரென்று நாடி அத்தனெதிர்
சிரிக்கனல் வாரிச்சொரி வாரிநிகர் பேரின்பத்தில் பக்தி
சாரனென்றே ஊஞ்சலாட்டுங்கடி கன
தீரனென்றே ஊஞ்சலாட்டுங்கடி.

## லாலி.

1 மாலின்வலக் கரமொளிரும்
பகிமையுற்ற நேசா
கோலமகீ க்ஷேத்ரமதில்
கொண்டாடும் பிரகாசா (லாலி)

2, பாலாழி யிற்றுயிலும்
பரமனருள் பாலா
சீலமுள்ள திருவாளன்
சென்றெடுத்த மூலா (லாலி)

3. கணிகண்ணன் தினம்போற்றும்
காந்தியுள்ள மெய்யா
மணிவண்ணன் பாய்சுருட்டி
வாவென்ற தய்யா. (லாலி)

4. திருமகளின் திருவருளாம்
ஜெகந்நாத னருளும்
கருவமைப்பி லேயடைந்த
கருணையுள்ள பொருளே. (லாலி)

## எச்சரிக்கை.

1. மதமாய்விஷ்ணு மதமேமற்ற
   ததமாமெனக் கூறிப்
   பதமாகிய சந்தப்புகல்
   பரனே எச்சரிக்கா.

2. பானுகிய திருமாலிரு
   பதம்போற்றிடு நேயா
   திரமாகிய திருவாய்மொழி
   செல்வா எச்சரிக்கா.

3. ஆரியர்கள் கரத்தில்சிக்கி
   அடியார் புயமேவி
   கூறும்அஷ்டா க்ஷரத்தால்பதம்
   கொடுப்பா யெச்சரிக்கா.

4. இன்னுள்பொரு ளின்னுளென்றே
   எடுத்தே முகர்தரித்து
   அன்னை திரு மங்கைசேயா
   அருள்வா யெச்சரிக்கா.

## மங்களம்.

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி

மங்களம் மங்களம் பவந்துதே
நித்யஜெய மங்கள மங்களம்.

சரணங்கள்.

1. புவியிலுயர்ந்தபுகழ் புண்ணியக்ஷேத்திரமென்றும்
   புலவர்புகழ் கோவினல்மதிக்க
   கவிநான்முகனந்தாதி சந்தவிருத்தம்பாடும்
   கருணைபொழியும்மாரி சுதரிசனையா (மங்கள)

2. வேழத்துயர்கெடுக்க விண்ணோர்பெருமானேவ
   வேகமுடனேயந்த மடுவில்சென்று
   ஆழப்புனலில்வாழும் அந்தக்கராவைவென்று
   அற்புதமகிக்ஷேத்ரம் அமர்ந்தவெண்ணெயா (மங்கள)

3. அந்தப்பெருமயோத்தி அரசன்புதல்வனாகி
அபிராமனுடன் தவவேடம்பூண்டு
மந்தகாசராம வாவெனவாராத்தால்
நந்திக்கிராமம்நின்ற நாதாபொற்பாதா (மங்க)

4, அன்றுசயிந்தவன்போரில் அறைந்தசத்தியம்பார்த்தற்கு
அபஜெயம்என்றும் வராமலே
குன்றேந்துங்கோபாலன் கூறுமொழியைக்கொண்டு
குளிர்மதிபோற்கதிரை மறைத்தவென்னையா (மங்க)

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம;

ஸ்ரீயப்பதியாய், ஸ்ரீவைகுண்டநிகேதனனாய் அகிலஹேயப்ரத்தியனீககல்யாணகுணபரி பூர்ணனாய்விளங்கும் ஸ்ரீமந்நாராயணனான ஸ்ரீயப்பதி வைகுண்டமிருந்து நித்தியசூரிகள் சப்தரிஷிகள், பூநீளா சமேதனாய் எழுந்தருளியிருக்குங்கால் சுர, கின்னர, கிம்புருட, கருட, காந்தர்வ, சித்த, வித்தியாதர, நித்தியமுத்தர்கள் சேவிதனாகும் பொருட்டு அகிலபுவனகாரண பூதனானவன் க்ஷீராப்தியிலெழுந்தருளி அரவத்தமளியோடும், அரவிந்தப்பாவையோடும், அழகியபாற்கடலிலே யோகநித்திரைசெய்ய அதுசமயம் ராவணகும்பகர்ன இந்திரஜித்து செய்யும் உபத்திரவங்களினாலே யவனோடு வானவர்சென்று க்ஷீராப்திநாதனைக் கரசரணுந்தி நேத்ரம் புவிமகள் தாங்கும்படியாக பொருந்தி, தெண்டம் சமர்ப்பித்து அஞ்சலி அஸ்தர்களாக நின்றுகொண்டு அகிலாண்டகோடி பிரமாண்டநாயகனான ஸ்ரீமந்நாராயணனைக் கேட்டுக்கொள்ளும் விண்ணப்பம்.

கரசரணுந்திநேத்ரம்கமலம் பிரகாசிக்காநின்றகமலநாதனை.

வெண்பா.

கார்கலந்தமேனியான் கைகலந்தநேமியான்
பார்கலந்தவல்வயிற்றான் பாம்பணையான்-சீர்கலந்த
தண்ணந்துழாய்முடியான் றன்னருளாலல்லாது
விண்ணவருக்குண்டோ விருந்து.

என்கிறபடியே முற்காலத்தில் தேவராகிய வெங்களுக்கு அமிர்த மருந்தைக்கொடுத்து அடியோங்களை ரக்ஷித்த கருணாநிதியே, கமலை

ப்பதியே, கள்வா, கண்டகரைச் சிட்சிக்கக் கருணையரிதோவென்று இவ்வாறு துதித்த தேவரைக்கண்டு திருக்கண்விழித்து அலர்ந்த செந்தாமரைபோல்; அபயப்பிரதானஞ் செய்து அவதாரஞ் செய்திடுவோம், அருள்மழை பெய்திடுவோம், அவர்களைக் கொய்திடுவோம், எனப்பகர்ந்து பூலோக வைகுண்டமென்னும்படியான ஸ்ரீஅயோத்தி மாநகரத்தில் சக்ரவர்த்தித் திருக்குமாரனாக அவதரிப்போம் என்கிறபடியே இவ்வாக்கிய சொரூபத்தை மானிட உருவமான அடியேன் ஆன்மா அவனுள்ளது அறிவு யோசனையுள்ளது ஆனபடியால் ஆன்மா தமக்கையாகவும், அறிவுதங்கையாகவும், ஸ்ரீராமாயணத்தை அவன் செய்த காரணம் யாது என, ஆன்மாகேட்கவும், விடையான வாக்கியம் அறிவு தங்கையாகக் கூறவும் இருவருக்கும் வினாவிடை.

---

## ஸ்ரீராமாயணகொம்மி.

### வெண்பா.

தங்கை தமக்கைபால் சார்ந்த வினாவின் விடையுரா[illegible]
பொங்கமுள ராம புராணமதை — இந்குல[illegible]
சீரார் சடகோபன் செய்ய திருத்தா[illegible]வும்
ஓராவென் சென்னியுவந்து.

### கொம்மி பாலகாண்டம்.

பரமபதம்விட்டுமாயன் பயணமானதேடி
பார்க்கடலின்மீதிலவன் பள்ளிகொள்ள[illegible]டி
அலைகடலில்கண் துயின்ற அதிசயந்தானே[illegible]
கலைபயிலுமண்டர்தொழக் கண்டெழுந்தானமடி.
தெசரதற்குமைந்தனான சேதியென்னசொல்லடி
தசமுகனைச்சம்மரிக்க ஜனித்தவள்ளலாமடி.
கௌசலைக்குமைந்தனான காரணந்தானேதடி
கௌசிகர்க்குப்பின்தொடர்ந்த கமலநேத்ரனமடி.
தாட்டகையைச்சம்மரித்த தாஷ்டீகந்தானேதடி
வாட்டமானமுனிவன்வேள்வி வந்துகார்த்தானமடி.
அகலிகைக்குச்சாபந்தீர்த்த அதிசயந்தானேதடி
மாமுனியின்வாக்கியத்தால் வந்துதொட்டானமடி.

சங்கரன் தன்சிலேயிறுத்த சங்கதிதானேதடி
மங்கையர்தஜனகன்மாதை மணம்புரியவாமடி.
பரசுராமன்தபம்பரித்த பராக்கிரமந்தானேதடி
பரித்தயோத்திமுடிதரிக்க பட்டபரிக்ஷையாமடி.

---

## அயோத்தியாகாண்டம்.

வேதங்காணுஞ்சுதனேமன்னன் வேண்டிச்சொன்னதேதடி
நீதகன்றயோத்திநகர் செங்கோல்செய்யவாமடி.
சங்கதிதெரிந்துகூனி தானெழுந்ததேதடி
மங்கைகைகைமுன்வரத்தை வாங்கச்சொல்லவாமடி.
வரத்தைக்கேட்டகைகைமாது மனமகிழ்ந்ததேதடி
உரத்தில்மிகுந்ததசரதன் உயிரைக்கொள்ளவாமடி.
அலர்மகள்கொழுநன்ராமன் அரசிழந்ததேதடி
மலரயனன்றவனுக்கு வகுத்தபுள்ளியாமடி.
உலகமுண்டநாதனுக்கு ஓங்குபுள்ளியேதடி
திலகம்போன்றலங்கைமன்னேத் தேடிக்கொல்லவாமடி.
ஜடைமகுடந்தானணிந்த சங்கதிதானேதடி
கொடையில்மிக்கதசரதன் கொடுத்தவரமாமடி.
பிரியாமலேஜவதேஹி பின்தொடர்ந்ததேதடி
அரிவையவளிங்கிருந்தால் அடவியில்வாதேதடி.
சுமித்திரைமைந்தன்பின்தொடர்ந்த குக்ஷமென்னசொல்லடி
அமிதனான இந்திரஜித்தை அறிந்துக்கொல்லவாமடி.
வேடனேக்கண்டவ்வனத்தில் வியந்துநின்றதேதடி
ஓடமேறிநதிகடந்து ஓங்கிநிற்கவாமடி.
பற்றுங்கனலால்சீதையுள்ளம் பதைத்துநின்றதேதடி
உற்றராமன்சித்ரகூடம் ஒளியைச்சொன்னுமடி.
சித்ரகூடமதனில்ராமன் சேர்ந்திருந்ததேதடி
பத்தனானபரதனுக்குப் பாதுகைதரவாமடி.
வரங்கொடுத்தசக்ரவர்த்தி மாய்ந்தவண்ணமேதடி
மறைந்துசுதனைக்கொல்லமறையோன் வறைந்தசாபமாமடி.
தீயசொல்லால்கைகைமைந்தன் திரும்புஞ்சேதிசொல்லடி
வையமாள்வாய்மகனேயென்று மகிழ்ந்துரைத்தாளாமடி.

அய்யனெங்கே அண்ணனெங்கென் றவன்கேட்டதேதடி
பையப்பையயவள்விழித்துப் பதறிநின்றாளாமடி.
மாதுரைத்தவாக்கியம்பரதன் மறித்துநின்றதேதடி
பேதைபாவியேனுன்வயிற்றில் பிறந்தேனென்றானாமடி.
தாயுரைத்தவாக்கியம்பரதன் தள்ளிநின்றதேதடி
பாயும்வேங்கைபோல்கைகையைப் பகைத்துநின்றானாமடி.
அண்ணன்சென்றகானைநோக்கி அவன்நடந்ததேதடி
விண்ணவர்துதிபரதன்தவ வேடங்கொண்டானாமடி.
சென்றபரதன்கானைநோக்கிச் சேர்ந்தசேதிசெப்படி
அன்றுசென்றராமனடியில் அவன்தொழுதானாமடி.
தந்தைமரித்தசேதிராமன் தானறியாதேதடி
வந்துபரதனுரைத்தபின்பு வாடிநொந்தானாமடி.
நால்வருங்கசிந்துருகியபின் நடந்தசேதிசொல்லடி
காலமானதசரதற்குக் கர்மஞ்செய்தாராமடி.
செய்திபின்புராமனோதும் செய்தியென்னசொல்லடி
வையமாள்வாய்தம்பியென்று வாழ்த்திச்சொன்னானாமடி.
வாழ்த்தியபின்பாதுகையைவாங்கிக்கொண்டதேதடி
தாழ்த்திமுடியெவரும்பணிய நந்திகிராமம்நின்றானாமடி.

## ஆரணியகாண்டம்.

அருமையாகவவ்விடத்தில் அமர்ந்திருந்ததேதடி
கருமதுஷ்டகாகாசூரன் கண்பரிக்கவாமடி
அந்தரத்திலேவிராதன் அவன்துதித்ததேதடி
கெந்தர்வன்முன்னாயிருந்த கீர்த்திபெறவாமடி.
பஞ்சவடிதீரமதில் பதிந்திருந்ததேதடி
நஞ்சையொத்தசூர்ப்பனகை நாசிகொய்யவாமடி.
தண்டகவனத்திலிராமன் தரித்திருந்ததேதடி
அண்டர்முனிவர்பயந்தெளிய அபயந்தந்தானாமடி.
வள்ளலந்தரகுபதியும் வாய்த்திருந்ததேதடி
கள்ளகரதூஷணனைக் கொள்ளைகொண்டானாமடி.
அன்னைஜனகிதன்னைவள்ளல் அவன்பிரிந்ததேதடி
மன்னன்ராமன்முன்னேவந்த மானைக்கொல்லவாமடி.

சேஷ்ஹருபிலக்ஷ்மணன்பின் சென்றவாறுகூறடி
பாஷண்டிபரக்கன்மாதைப் பற்றிகொள்ளவாபடி.

பக்ஷிராஜன்சண்டைசெய்த பராக்கிரமந்தானேதடி
கக்ஷிசெய்துதசமுகனை கண்டமரித்தானுமடி.

ஜானகியசோகவனம் தன்னில்வைத்ததேதடி
வானமாதர்சிறைகள்மீட்க வந்திருந்தாளாமடி.

மைதிலியைத்தேடிராமன் மயங்கிநின்றதேதடி
வைதுயுத்தம்செய்தபக்ஷி வந்துகூறவாமடி.

சமுகுராஜனுக்குராமன் கர்மஞ்செய்ததேதடி
வழுவிலா ததசரதற்கு மகிழுநேசனுமடி.

கவந்தனிருகரந்துணித்த காரணந்தானேதடி
அவன்துதித்துமோக்ஷவீடு அங்கடைந்தானுமடி.

வேடச்சிசேஷம்ராமன் விருப்பியுண்டதேதடி
நாடரியவன்புசெய்யும் நன்னடையுள்ளாளடி

---

## கிஷ்கிந்தாகாண்டம்.

வாய்வுபுத்திரன்ராமனை வணங்கிநின்றதேதடி
தாய்ஜனகிபிரிந்தசோகம் தான்தணிக்கவாமடி.

இரவிமைந்தனிருவரையும் இணங்கிநின்றதேதடி
சரமொன்றினால்ராமன் சப்தமரந்துளைக்கவாமடி.

வாசவன்புதல்வனை வாலிமாண்டதேதடி
நேசஞ்செய்யாமல்ராமன் நின்றுகொன்றானுமடி.

வெம்பிதாரைபுலம்பியபின் விபரமென்னசொல்லடி
தம்பிக்குத்தம்பி முடிதரித்தானென்றுதேரடி.

வானரசைன்யமெல்லாம் வளைந்துநின்றதேதடி
கானவர்புகழராமன் கணையாழியீயவாமடி.

கண்டபேரிருக்கனுமன் கணையாழிகொண்டதேதடி
அண்டமேழுப்புகழுங்கடலை அவன்கடக்கவாமடி.

---

## சுந்தரகாண்டம்.

கோட்டைவாசற்காவற்காரியைக் கொள்ளைக்கொண்டதேதடி
வாட்டமில்லா இலங்கைநகர் வந்தழிக்கவாமடி.

மாடிமீதிலாஞ்சநேயன் மயங்கிநின்றதேதடி
ஓடிதேடிக்காணுமைபால் ஒடுங்கிநின்றானடி

அரக்கன்பாரிசயனங்கண்டு அஞ்சிநின்றதேதடி
வரக்குமாரிஜனகியென்று மயங்கிநின்றானடி.

அவனைக்கொல்லபலமிலானோ அஞ்சிவந்ததேதடி
கவனவாலிகாலராமன் கண்டுகொல்லவாமடி.

தேடியோடியசோகவனத்தில் திகைத்துநின்றதேதடி
வாடுஜனகியோடரக்கன் வாதுசெய்தானடி.

அஞ்சாதராக்ஷசிகள் அங்குறங்கினதேதடி
கஞ்சமலர்ஜனகிகரத்தில் கணையாழிதாவாமடி,

ரகுபதிக்குஜனகிசொன்ன ரகசியந்தானேதடி
வெகுபிரகாசசூடாமணி வியந்துதந்தாளாமடி,

மாருதியுடன்ஜனகி வாராதென்னசொல்லடி
காருலாவுமசோகவனம் கண்டழிக்கவாமடி.

அனர்த்தசோகவனத்திலனுமன் அஞ்சிநின்றதேதடி
கனத்தராவணன்கொலுவில் கண்டுபேசவாமடி.

அஞ்சிநின்றமாருதி அவனுயர்ந்ததேதடி
வஞ்சமானவால்வளர்த்தி மகிழ்ந்தெழுந்தானடி.

வீசுங்கட்கம்தசமுகன் விலக்கிநின்றதேதடி
மாசிலாதவிபீஷணன் வறைந்தசொல்லாலாமடி.

கொண்டல்வண்ணன் தூதன்வாலைக் கொளுத்திவிட்டதேதடி
கண்டகன் இலங்கையெல்லாம் கனலெரியவாமடி.

வாகானகடல்கடந்து வந்தசேதிசொல்லடி
ஆகாயவீதிதன்னில் அவனெழுந்தானமடி.

வந்தபிறகுமாருதி மயங்கிநின்றதேதடி
மந்தகாசன்வாலிவனத்தில் மதுவையுண்டானடி.

சென்றவரைக்காணேனென்று ஸ்ரீராமன்சொன்னதேதடி
அந்தஜென்மபூர்வக்கியானம் அவனுக்கில்லையாமடி.

விண்டபொருளைநினைந்துராமன் வெதும்பிநின்றதேதடி
கண்டேன்சீதையையென்றுமாருதி கரங்குவித்தானுமடி.

தேடியனுமனோடிவந்து திரும்பிநின்றதேதடி
வாடும்சீதைவாழும்வனத்தை வணங்கிநின்றானுமடி.

சொல்லுமுன்னேராமனுக்குச் சுகம்பிறந்ததேதடி
வில்லிறுத்தஜனக்குமாரிவிளங்கிநின்றாளாமடி.

ஆழிகொண்டஆஞ்சநேயன் அவன்கொடுத்ததேதடி
வாழியென்றுராமன்மணியை வாங்கிகொண்டானுமடி.

கண்டபின்னும்ஜானகியைக் கடலடைத்ததேதடி
வண்டுபோல்சுழல்மனத்தால் மயங்கிநின்றானுமடி.

## யுத்தகாண்டம்.

அலைமிகுந்தகடல்மேல்ராமன் அஸ்திரந்தொட்டதேதடி
மலையடர்ந்துவழிகொடுக்க வருணன்வந்தானுமடி.

அரக்கன்வந்துஅபயமென்று அஞ்சலித்ததேதடி
மறுக்கவொண்ணுசிரஞ்சீவி மகுடஞ்சூட்டவாமடி.

சீலவாலிமைந்தனங்கதன் சென்றதூதுஏதடி
கோலநீலஜாம்புவன் கூடிச்சென்றானுமடி.

விண்ணவர்துதிக்கராமன் வேலைச்சென்றதேதடி
மண்மிசைகும்பகர்னன்மணி முடியறுக்கவாமடி.

பழையபடியிளையகோவு பாய்ந்துநின்றதேதடி
கழையைப்போன்றநாகபாசம் கட்டிநின்றானுமடி.

அந்தப்பாசம்தான்கழல அவன்துதித்ததேதடி
சொந்தமானவைனதேயன் வந்தொழித்தானுமடி.

வானரசைன்யமெல்லாம் மடிந்தவாறுஏதடி
கானசஞ்சீவியனுமன்தர காற்றுலெழுந்தாராமடி.

நிகும்பலைசெய் இந்திரஜித்து நின்றவாறுகூறடி
தகுபன்னிரண்டாண்டுண்ணு தம்பிக்கொன்றானுமடி.

அங்குவந்தமூலபலம் அதுமடிந்ததேதடி
அங்குராமனிங்குராம னவனிருக்கவாமடி.

மண்டோதரிநாதன்ரதத்தில் மருவிவந்ததேதடி
கொண்டல்வண்ணன்ராமபாணம் கூறுசெய்யவாமடி.

தாதுலாவும்மாலைராமன் தரணிநின்றதேதடி
மாதலிதேர்கொண்டுவர மகிழ்ந்தூர்ந்தானுமடி.

அந்தரத்திலிருரதமும் அதுசூழ்ன்றதேதடி
மந்தகாசன்கோதண்டத்தின் வலிதெரியவாமடி.

சமரசமாய்ச்சமர்புரிந்த தாஷ்டீகந்தானேதடி
அமரர்போற்றும்ரகுபதி அவனைஜெயித்தானுமடி.

அத்தன்கைலைகிரியெடுக்க அரக்கன்மாண்டதேதடி
பத்துசிரமும்பனங்குலைபோல் பாரிலுதிர்த்தானுமடி.

தொண்டனுமன்விபீஷணன் தொழுதுநின்றதேதடி
அண்டர்மலர்சொரிந்துராமனை அங்குபுகழ்ந்தாராமடி.

சிறையிருந்தஜனகிவந்து தீக்குளித்ததேதடி
மறைஜொலிக்கும்பிர்ம்மனக்கினி வந்துபுகழ்ந்தாராமடி.

அந்தரமாம்புஷ்பகத்தில் ஆரோகணித்ததேதடி
விந்தையானபரத்துவாசர் விருந்தையுண்ணவாமடி.

அமிசைக்குமுன்ஆஞ்சநேயன் அயோத்திசென்றதேதடி
தமியேன்ராமதூதனென்று தம்பியைக்காக்கவாமடி.

பந்தமானபரதன்தீயில் பாயாமல்நின்றதேதடி
வந்தான்ராமனென்றனுமான் வரைந்தசொல்லாலாமடி.

முன்புரைத்தமொழியைராமன் மோசஞ்செய்யாதேதடி.
அன்பனானகுகனைராமன் அழைத்துக்கொண்டானுமடி.

தீதகன்றவயோத்திநகர் சென்றவாறுசொல்லடி
காதலிஜனகியோடு காக்ஷிதரவாமடி.

அரியாசனத்திருந்த அதிசயந்தானேதடி
வரிசைத்தம்பிமார்களுடன் மகுடஞ்சூட்டவாமடி.

## பட்டாபிஷேகம்.

அலர்த்தலைசிங்காசனத்தில் அய்யன்வீற்றதேதடி
குலக்குருவசிஷ்டன்கிரீடங் கொண்டுசூட்டவாமடி.

அரவராசனும்புகழவொண்ணா அவன்கொலுவைபாரடி
சுரகின்னரகிம்புருடர் துதிக்குஞ்சுந்தரனாமடி.

மாரனானராமனுக்கு மாமனாருகூரடி
காருலாவுமிதிலைஜனகன் களிக்குரானிதோபாரடி.

அந்தமானராமனுக்கு அதிசொந்தமாருசொல்லடி
பந்தம்விட்டவன்பதம்பணிந்த வன்பத்தனென்றுவெல்லடி.

வந்ததோர்ப்பிரஜைகட்கு மரியாதைசெய்ததேதடி
விந்தையானகோடிபூஷணம் வெகுமதிசெய்தாராமடி.

அற்றவர் துறந்தவர் அவர்மகிழ்ந்ததேதடி
சிற்றரசர்வணங்கராமன் சிங்காசனமிருந்தானாமடி.

வேதமோங்கவேள்வியோங்க விளங்கிநின்றதேதடி
பாதம்பற்றிஆஞ்சநேயன் பார்த்துமகிழவாமடி.

அன்னைஜனகிதிருவடியில் அலரெடுத்துச்சூட்டடி
மன்னர்மன்னர்புகழும்ராமனை மங்களங்கள்பாடடி.

அஞ்செழுத்தில் எட்டெழுத்தில் ஆய்ந்தரெண்டெழுத்தினால்
வஞ்சிசீதைநாதனாக வாய்ந்தவர்க்கு மங்களம்.

ஸ்ரீமத் ராமாயணகொம்மி

ஸம்பூர்ணம்.